**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**

**நாள். 27.11.2025.**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**

**அசல் வழக்கு எண். 12/2025**

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருநாவுக்கரசு | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | சுந்தரம் | வயது | : | 56 |
| ஊர் | : | சோதியம்பாக்கம் | தொழில் | : | உதவி மாவட்ட அலுவலர், தீயணைப்புத்துறை |

**வா.சா. 1 : (திருநாவுக்கரசு) குறுக்கு விசாரணை:**

1. கணேச கவுண்டரும், வாதியின் தகப்பனார் சுந்தர கவுண்டரும் எப்போது பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் 18.02.2008 ஆகும். வாச்சா பாகப்பிரிவினை எப்போது நடந்தது என்று தெரியுமா என்றால் 1982ல் வாச்சா பாகப்பிரிவினை நடந்தது. வாச்சா பாகப்பிரிவினை செய்யப்பட்ட சொத்துக்கள்தான் 2008லும் பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் இல்லை. வாச்சா பாகப்பிரிவினை செய்யப்பட்டு கணேச கவுண்டரும், சுந்தர கவுண்டரும் அவர் அவர்களுக்கு வந்த பாகத்தினை அனுபவித்த சொத்துக்களைதான் 18.02.2008ல் பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

2. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 6ம் பக்கத்தில் 13ம் பத்தியில் 1991ம் ஆண்டு குடும்ப சொத்துக்கள் குறித்து பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் இருவருக்கும் வாய்மொழியாக பிரித்துக்கொடுத்துவிட்டனர் என்று கூறியுள்ளேன் என்றும் தற்போது எனது விசாரணையில் 1982 என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் 1991ல் பஞ்சாயத்தார் முன்னிலையில் வாய்மொழியாக பிரித்துக்கொடுத்தது உண்மை. 2008ல் சரியான பாகப்பிரிவினை எதுவும் நடக்கவில்லை. மேற்படி பஞ்சாயத்தார் முன்னிலையில் 1991ல் நடைபெற்ற வாச்சா பாகப்பிரிவினை சரி என்றும் 2008ல் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை சரியல்ல என்றும் எனது தாவாவிலோ அல்லது எனது பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன்.

3. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 7ம் பக்கத்தில் அதன்படிக்கு என்னுடைய தகப்பனாருக்கு பாகமாக ஒதுக்கிய சொத்தினை என்னுடைய தகப்பனாரும் கணேச கவுண்டருக்கு பாகமாக ஒதுக்கிய சொத்தினை அவரும் அடைந்து அனுபவித்து வந்தனர் என்றும் என்னுடைய தகப்பனாருக்கு பாகமாக ஒதுக்கிய சொத்திற்கான பட்டா அப்பொழுதே என்னுடைய தகப்பனார் பெயருக்கு மாறிவிட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும் அதன்படி நாங்கள் பெற்ற சொத்துக்கு தனியாக பட்டா பெற்று அனுபவித்து வந்தோம் என்று சொன்னால் சரிதான்.

4. மேற்படி நான் 1991ல் நடந்த வாச்சா பாகப்பிரிவினையை செய்து அனுபவித்து வந்த சொத்தினை 2008ல் என் தந்தைக்கு கிடைக்கப்பெற்று எந்த எந்த சொத்துக்கள் அதனின் சர்வே எண் உடனும் கணேச கவுண்டரால் ஏமாற்றி அபகரிக்கப்பட்டது என்று எனது தாவாவிலோ அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்று சொன்னால் குறிப்பிட்டுள்ளேன். நான் பொய் சொல்கிறேன் எனவும் பட்டா சொத்துக்கள் என்னவென்று குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னதுபோல் 1982ல் நடந்த வாச்சா பாகப்பிரிவினையும் 1991ல் பஞ்சாயத்தார் முன்னிலையில் நடந்த பாகப்ப்ரிவினையும் 2008ல் நடந்த பாகப்பிரிவினையும் ஒன்று என்றும், கணேச கவுண்டர் ஏமாற்றவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. 2008ல் நடந்த பாகப்பிரிவினை சரியான முறையில் நடைபெறவில்லை. கணேச கவுண்டர் ஏமாற்றிவிட்டார்.

5. எனது தாவாவில் எனது தந்தை படிப்பறிவு இல்லாதவர் என்றும் கணேச கவுண்டர் விவரமானவர் மற்றும் படிப்பறிவு உடையவர் என்றும் குறிப்பிட்டுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை படிப்பறிவு இல்லாதவர் ஆவர். 1991ம் தேதியில் நடைபெற்ற பாகப்பிரிவினைக்கு பிறகு அது சரியில்லை என்று எனது தந்தை எந்த ஒரு நடவடிக்கையும் 2008 வரை எடுக்காததால் மேற்படி பாகப்பிரிவினையானது முறையாக நடந்தது என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை படிப்பறிவு இல்லாதவர். பலமுறை பாகப்பிரிவினையை சரி செய்து கொடுக்குமாறு அனுகியும் சரி செய்து கொடுக்கப்படவில்லை.

6. 2008ல் முறையான பாகப்பிரிவினை நடைபெறவில்லை என்று என் தந்தையே வழக்கு தாக்கல் செய்திருப்பார் என்றும் எனக்கு வழக்கு தாக்கல் செய்ய உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தானது மூதாதையர் சொத்து என்பதால் எனக்கு அதில் முழு அதிகாரமும் உரிமையும் வழக்கு தாக்கல் செய்வதற்கு உண்டு. மேற்படி கணேச கவுண்டர் என்பவர் உயிருடன் இருக்கும்போதே வழக்கு தாக்கல் செய்திருக்கலாம் என்று சொன்னால் கணேச கவுண்டர் எனக்கு பெரிய தந்தை ஆவார். அவரிடம் நான் பலமுறை கூறியிருக்கிறேன். அவர் நம்பகம் தெரிவித்ததன் அடிப்படையில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. ஆனால் அவர் திடீரென்று 2022ல் காலமாகிவிட்டார்.

7. நான் சொல்வதெல்லாம் தவறு என்றும் பிரதிவாதி படிப்பறிவில்லாதவர் என்றும்நான் படிப்பறிவுடன் நல்ல பொறுப்புடன் உள்ள பதவியில் இருந்தும் ஏதோ ஒரு நோக்கத்திற்காக பிரதிவாதியை ஏமாற்றவேண்டும் என்பதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி 12ம் வகுப்பு வரை படித்துள்ளார். அவரிடமும் நான் பலமுறை அனுகி பாகப்பிரிவினையை முறையாக சரி செய்து கொடுக்கும்படி கேட்டுள்ளேன். ஆனால் சரி செய்து கொடுக்கப்படவில்லை. வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கிரைய ஆவணத்தில் உள்ள சொத்தானது எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 17 1/2 சென்ட்டாகும். மேற்படி கிரய ஆவணம் எந்தத வருடத்தில் ஏற்படுத்தப்பட்டது என்றால் 2008ல் ஏற்படுத்தப்பட்டது. அதனின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தற்போது சரியாக ஞாபகமில்லை.

8. மேற்படி கிரய ஆவணத்தன் படி யாரிடமிருந்து சொத்துக்கள் பெறப்பட்டது என்றால் என்னுடைய தந்தையின் சித்தப்பா மகள் புஷ்பா என்பவரிடமிருந்து என் தந்தை கிரயம் பெற்றார். மேற்படி 28.07.2008 அன்று கணேச கவுண்டர் என்பவர் கிணற்றில் அரை பாகம் தமிழ்ச்செல்வி என்பவரிடம் கிரயம் பெற்றார் என்றும் அதே தேதியில் என்னுடைய தந்தை அரை பாகம் புஷ்பா என்பவரிடமிருந்து கிரயம் பெற்றார் என்றும் சொன்னால் சரிதான். 2008

பாகப்பிரிவினைக்கு பின்பு 28.07.2008ல் கிரயம் பெற்ற சொத்தில் கிணறு பாகத்தில் பாதி கிரயம் பெறப்பட்டுள்ளது. மேற்படி கணேச கவுண்டர் ஏமாறும் நோக்கத்தோடு செயல்பட்டிருந்தால் முழு பாகத்தையும் கிரயம் பெற்றிருப்பார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி புஷ்பா என்பவர் என்னுடைய தந்தையிடம் அடமானம் வைத்து பணம் பெற்றிருந்ததால் அதற்காக அவர் என்னுடைய தந்தைக்கு கிரயம் கொடுத்தார்கள். கணேச கவுண்டருக்கு கிரயம் கொடுக்க விருப்பம் இல்லை.

9. நான் பொய் சொல்கிறேன் என்றும் எனது பிரமாண வாக்குமூலத்தில் ஒழுங்காக படித்து சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆக குறியிடப்பட்டுள்ள கிரய ஆவணத்தில் புஷ்பா என்பவரும் தமிழ்ச்செல்வி என்பவரும் என் தந்தைக்கு சேர்ந்துதான் கிரயம் கொடுக்கப்பட்டது என்றும் நான் மேற்படி சாட்சியத்தில் மாற்றி பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்தானது கூட்டு சொத்தாக இருந்தது. மேற்படி இ அயிட்ட சொத்தில் சர்வே எண் 91/3 ல் உள்ள கிணற்றில் உள்ள பாகம் யாருக்கு உள்ளது என்று சொன்னால் 5ந்து பாகத்தில் 1 பாகம் பாலகிருஷ்ணன் என்பவருக்கும் மற்றொரு பாகம் முத்து கவுண்டர் என்பவருக்கும் சொந்தமானது. முத்து கவுண்டர் உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. அவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 2 வாரிசுகள். ஒருவர் சிவசங்கரன், மற்றொருவர் பூபாலன் ஆவார். அதில் சிவசங்கரன் இறந்துவிட்டார். சிவசங்கரனின் வாரிசு வெளிநாட்டில் வசித்து வருகிறார்.

10. மேற்படி முத்து கவுண்டருக்கு கிணற்று பாகத்தில் உள்ள சொத்தானது அங்கு உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் சாகுபடி செய்து வருகிறேனா என்றால் இல்லை. பிரதிவாதி சாகுபடி செய்கிறாரா என்றால் தெரியாது. மேற்படி முத்து கவுண்டரின் சொத்தில் யார் பயிரிட்டு வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. சி அயிட்ட சொத்தில் சர்வே எண் 91/3பி உள்ள கிணறு, டி அயிட்ட சொத்தில் சர்வே எண் 91/6ஏ அன்னபூரணி என்பவருக்கு சொந்தமான சொத்து என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் மேற்படி பிரதிவாதியும் முத்து கவுண்டரும் என்ன பயிர் செய்கிறார்கள் என்பதற்கு தெரியவில்லை என்று மேற்படி சாட்சியம் சொல்லிவிட்டு ஆனால் தற்போது எனது வழக்கானது பிரதிவாதி சர்வே எண் 91/3பி கிணற்றிலிருந்து டி செட்யுல் சொத்துக்களுக்கு தண்ணீர் எடுத்துச் செல்கிறார் என்ற விவரம் தெரிந்துகொண்டு பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

11. பிரதிவாதி தன்னுடைய பாகத்திற்கும் முத்து கவுண்டருடைய பாகத்திற்கும்தான் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து பயிர் செய்து வருகிறார்கள் என்றும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி டி செட்யுல் சொத்திற்கும் கிணற்றுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. மேற்படி டி செட்யுல் சொத்தானது பிரதிவாதியின் தாயார் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்தாகும். அதனால்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி முத்து கவுண்டர் பாக சொத்திற்குதான் தண்ணீர் பாய்ச்சி பயிரிட்டு வருகிறார் என்றும் எக்காலத்திலும் அன்னபூரணி சொத்திற்கு எந்த ஒரு தண்ணீர் எடுத்து பாய்ச்சவில்லை என்றும் இந்த வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றும் அதனால் என்னுடைய வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

12. தற்போது சாட்சியானவர் தாமாக முன்வந்து மேற்படி முத்து கவுண்டருக்கு இரண்டு வாரிசுகள் என்றும் அதில் இருவருக்கும் 17 1/2 சென்ட் பாகப்பிரிவினை செய்துகொண்டு என்றும் மேற்படி சிவசங்கரன் இறந்துவிட்டபடியால் அவரின் பங்கினை இப்பிரதிவாதி பயிரிட்டு

வருகிறார் என்றும் பூபாலனின் சொத்தை அவரே பயிர் செய்து வருகிறார். தற்போது யார் பயிர் செய்து வருகிறார்கள் என்ற விவரம் தெரியாது என்று கூறினார்.

13. நான் சொத்திற்கு அருகிலேயே செல்லாமல் இப்பொழுதும் பிரதிவாதிதான் சிவசங்கரன் நிலத்தில் பயிர் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. நான் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று சொத்திற்கு சென்று பார்த்தபொழுது டி அயிட்ட சொத்தை தவிர்த்து அனைத்து நிலங்களும் தரிசாக இருந்தது ஆனால் டி அயிட்ட சொத்தில் மட்டும் உழவு செய்யப்பட்டு இருந்தது. நான் சொல்வது போல் பிரதிவாதி சி அயிட்ட சொத்தில் 91/3டியில் இருந்து டி அயிட்ட சொத்திற்கு 91/6ஏக்கு எப்பொழுதும் தண்ணீர் எடுத்துச் செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சி அயிட்ட சொத்தில் இருந்துதான் டி அயிட்ட சொத்தில் தண்ணீர் பாய்ச்சி உழவு செய்யப்பட்டுள்ளது. என்னுடைய சொத்தில் நான் பயிர் செய்யவில்லை என்று சொன்னாலும் சுமார் 3 வருடங்கள் முன்பு வரை பயிர் செய்யவில்லை என்று சொன்னாலும் நான் எ னது நிலத்தின் அருகில் செல்லவில்லை என்று சொன்னாலும் சரிதான். அவ்வாறு இருக்கையில் என்னால் அருதியிட்டு பிரதிவாதிதான் டி செட்யுல் சொத்தை உழவு செய்து வருகிறார் என்று எந்தவொரு ஆதாரத்துடனும் நிரூபிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி நிலமானது என்னுடைய வீட்டிற்கு அருகிலேயே உள்ளதால் என்னுடைய தாயாரை காண்பதற்கு அவ்வப்போது செல்லும்போது நான் பார்த்திருக்கிறேன். நான் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் இந்த வழக்கினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**(கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

K NALEENI Digitally signed by K NALEENI Date: 2025.11.27 17:11:42 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு